
## இயல் 6.6 - தகவல் செயலாக்கம்

பயிற்சி எண் :: 6.6.1.2.G


கட்டமைப்பு அணுகுமுறை - சதுரங்களை கணக்கிடல் - பயிற்சி

### கட்டமைப்பு அணுகுமுறை - சதுரங்களை கணக்கிடல் - பயிற்சி





1. இங்கே கொடுக்கப்பட்டுள்ள கட்டங்கள் அமைந்த படத்தில் உள்ள ஒவ்வொரு முனையும் "A" முதல் "Y" வரை பெயரிடப்பட்டுள்ளன.
2. இந்த படத்தில் உள்ள மொத்த சதுரங்கள் எத்தனை என்பதை கணக்கிட்டுக்கூறுக.

### சதுரங்களின் எண்ணிக்கையை கணக்கிடல்





இதில் ஒரே ஒரு சதுரம் மட்டுமே உள்ளது.





இதுபோன்று மொத்தம் 4 சதுரங்கள் உள்ளன. அதாவது $4 = 2^2$

### சதுரங்களின் எண்ணிக்கையை கணக்கிடல்




இதுபோன்று மொத்தம் 9 சதுரங்கள் உள்ளன. அதாவது $9 = 3^2$




இதுபோன்று மொத்தம் 16 சதுரங்கள் உள்ளன. அதாவது $16 = 4^2$

### விடை

மொத்தம் சதுரங்கள் $\Rightarrow 1 + 4 + 9 + 16 = 1^2 + 2^2 + 3^2 + 4^2 = 30$

இதே போன்று உதாரணமாக 7 அடுக்கு உள்ள ஒரு சதுர அமைப்பில் உள்ள மொத்த சதுரங்களை அது போன்று ஒரு படத்தை வரைந்து சதுரங்களை கணக்கிடாமலேயே மேற்குறிப்பிட்ட சமன்பாட்டை உபயோகித்து கண்டுபிடித்து விடலாம். 7 அடுக்கு உள்ள ஒரு சதுர அமைப்பில் உள்ள சதுரங்கள் $\Rightarrow 1^2 + 2^2 + 3^2 + 4^2 + 5^2 + 6^2 + 7^2 = 1 + 4 + 9 + 16 + 25 + 36 + 49 = 140$

Sum & solution prepared on Sunday 5th September, 2021 :: 18:12 Hrs.
All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.